**<u>In the Court of the District Munsif, Eraniel</u>**

**Original Suit No. 96/2016 Date:04.04.2025**

**(P.W.1)- ஃபருக்**

**<u>1, 2, 5 முதல் 7 ஆம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. 17 ½ சென்ட் சொத்து நஜீமுதீன் பெயரில் ஆவண எண் 643/1995-ன்படி வாங்கப்பட்டது என்றால் சரியல்ல, பள்ளியின் பெயரில் வாங்கியது. என்னுடைய பெயரில் வாங்கியதல்ல. குளச்சல்- ராஜாக்கமங்கலம் ரோடில் உள்ள 27.750 சென்ட் சொத்து Orient English Academy பள்ளியின் பெயரில் வாங்கிய சொத்து ஆகும். கன்னியாகுமரி மாவட்டத்தில் கடந்த 26.12.2004 அன்று சுனாமி பேரழிவு ஏற்பட்டது என்றால் சரிதான். மேற்சொன்ன பேரழிவினால் 26.12.2004-ற்கு பிறகு மேற்சொன்ன பள்ளி முழுமையாக சீர்குலைந்து செயல்படவில்லை என்றால் பகுதியாக சீர்குலைந்தது, பள்ளி செயல்படவில்லை. அதன்பிறகு பள்ளி SBM Hall என்னும் கல்யாண மண்டபத்தில் 16.01.2005 முதல் மார்ச் 2005 வரை செயல்பட்டது. வா.சாஆ.1-ஆக தாக்கல் செய்துள்ள ஆவணம் மேற்சொன்ன செயல்படாத பள்ளிக்கு, பள்ளி செயல்படாத நேரத்தில் நிறைவேற்றப்பட்ட ஆவணம் என்றால் சரிதான், அப்போது பள்ளிக்கூடம் மேற்சொன்ன SBM Hall-ல் தற்காலிகமாக செயல்பட்டுக்கொண்டிருந்தது.

2. 16.01.2005 வரை மேற்சொன்ன பள்ளிக்கூடம் மேற்சொன்ன SBM Hall-ல் செயல்பட்டு தற்போது காமராஜர் சாலையில் உள்ள தற்போது செயல்பட்டு வரும் பள்ளிக்கூடத்தில் உள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணப்படி 750 சதுர லிங்ஸ்தான் வாங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான், அது பள்ளிக்குச் செல்லக்கூடிய

**1, 2, 5 முதல் 7 ஆம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

பாதையாகும். மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தில் பாதை என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்படவில்லை. ஆவணத்திற்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி வா.சா.ஆ-1 ஆவண சொத்து பள்ளி செயல்படாத நேரத்தில் வாங்கியது என்றால் சரிதான். மேற்சொன்ன வா.சா.ஆ-1 ஆவண சொத்தையும் சேர்த்துதான் பழைய பள்ளியின் மொத்த விஸ்தீரணமாக 27.750 சதுர லிங்ஸ் ஆக உள்ளது என்றால் சரிதான்.

3. புதிய பள்ளிக்கு எந்த வருடத்திலிருந்து சொத்து வாங்கியது என்றால் 2005-முதல் 2011 வரை வாங்கினேன். 2005-ஆம் வருடம் ஆவண எண் 477/2005, குளச்சல் சார்பதிவாளர் அலுவலகத்தில் 24 சென்ட் சொத்து பள்ளிக்காக கிரையம் தனிநபர் பெயரில் வாங்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி சொத்து நான்கு நபர்கள் பெயரில் வாங்கப்பட்டது என்றால் சரிதான். அதேபோல் 2006-ல் குளச்சல் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண் 2225/2006-ன்படி 5 சென்ட் சொத்து தனிநபர் பெயரில் வாங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல் 2009-ஆம் வருடம் குளச்சல் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண் 1039/2009-ன்படி 4 சென்ட் சொத்து 2-ஆம் பிரதிவாதி பெயரில் வாங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். குளச்சல் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண் 10374/2009-ன்படி 5 சென்ட் சொத்து பள்ளியின் நிதியை கொண்டு என் பெயரில் வாங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி என் பெயரில் பதிவு செய்யப்பட்ட சொத்தை வாங்குவதற்கு வங்கியில் கடன் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல.

(P.W.1)- ஃபருக்

**<u>1, 2, 5 முதல் 7 ஆம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

4. குளச்சல் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண் 1038/2009-ன்படி 7 சென்ட் சொத்து பள்ளியின் நிதியை கொண்டு பள்ளிக்காக வாங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன ஆவணங்களில் காட்டப்பட்டுள்ள உரிமையாளர்கள் தான் அந்தந்த சொத்துக்களை 30 ஆண்டுகளாக பள்ளியின் பெயரில் குத்தகைக்கு அனுபவித்து வருகிறார்கள் என்றால் பள்ளியின் பெயரில் உள்ள 7 சென்ட் சொத்தை தவிர மீதமுள்ள 38 சென்ட் சொத்துக்களை அனுபவித்து வருகிறார்கள். என் சகோதரர் பெயர் அசீஸ் என்றால் சரிதான். மேற்சொன்ன அசீஸ் பெயருக்கு பள்ளியின் பெயரில் வங்கியில் பெற்ற கடன் மூலம் 5 சென்ட் சொத்து கிரையம் பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்சொன்ன அசீஸ் பெயரில் உள்ள 5 சென்ட் சொத்தையும் சேர்த்துதான் பள்ளியின் குத்தைக்கு சேர்க்கப்பட்டுள்ளது என்று பிராதுவில் பத்தி எண்-10-ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, மொழி பிரச்சனை.

5. இந்நீதிமன்றத்தில் நான் இவ்வழக்கு சொத்து சம்மந்தமாக அசல் வழக்கு எண் 33/2012 வழக்னை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் மேற்படி அசல்வழக்கு எண் 33/2012 வழக்கு பிராதின் சான்றிட்ட நகல் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(P.W.1)- ஃபருக்

**<u>1, 2, 5 முதல் 7 ஆம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் மேற்படி அசல்வழக்கு எண் 33/2012 தாக்கல் செய்யப்பட்டுள்ள I.A. No.377/2013 மனுவின் சான்றிட்ட நகல் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் மேற்படி அசல் வழக்கு எண் 33/2012 தாக்கல் செய்யப்பட்டுள்ள I.A. No.377/2013 மனுவின் மீது பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் சான்றிட்ட நகல் என்றால் சரிதான்.மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் மேற்படி அசல் வழக்கு எண் 33/2012 தாக்கல் செய்யப்பட்டுள்ள I.A. No.398/2013 மனுவின் சான்றிட்ட நகல் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் மேற்படி அசல் வழக்கு எண் 33/2012 தாக்கல் செய்யப்பட்டுள்ள I.A. No.398/2013 மனுவின் மீது பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் சான்றிட்ட நகல் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் மேற்படி அசல் வழக்கு எண் 33/2012 தாக்கல் செய்யப்பட்டுள்ள I.A. No.379/2013 மனுவின் சான்றிட்ட நகல் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(P.W.1)- ஃபருக்

**1, 2, 5 முதல் 7 ஆம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் மேற்படி அசல் வழக்கு எண் 33/2012 தாக்கல் செய்யப்பட்டுள்ள I.A. No.379/2013 மனுவின் மீது பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் சான்றிட்ட நகல் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் மேற்படி அசல் வழக்கு எண் 33/2012 தாக்கல் செய்யப்பட்டுள்ள I.A. No.380/2013 மனுவின் மீது பிறப்பிக்கப்பட்ட மனுவின் சான்றிட்ட நகல் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் மேற்படி அசல் வழக்கு எண் 33/2012 தாக்கல் செய்யப்பட்டுள்ள I.A. No.380/2013 மனுவின் மீது பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் சான்றிட்ட நகல் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் மேற்படி அசல் வழக்கு எண் 33/2012 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரையின் சான்றிட்ட நகல் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் மேற்படி அசல் வழக்கு எண் 33/2012 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(P.W.1)- ஃபருக்

**1, 2, 5 முதல் 7 ஆம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

6. நான்தான் மேற்சொன்ன அசல்வழக்கு எண் 33/2012 வழக்கில் வாதி என்றால் சரிதான். மேற்படி அசல்வழக்கு எண் 33/2012-ல்உள்ள 3-ஆம் பிரதிவாதி இவ்வழக்கின் முதல் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளார் என்றால்சரிதான். அதேபோல் மேற்படி அசல் வழக்கு எண் 33/2012-ல் உள்ள 5-ஆம் பிரதிவாதி இவ்வழக்கின் 2-ஆம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். அதேபோல் மேற்படி அசல் வழக்கு எண் 33/2012-ல் உள்ள 1-ஆம் பிரதிவாதி இவ்வழக்கின் 3-ஆம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். அதேபோல் மேற்படி அசல் வழக்கு எண் 33/2012-ல் உள்ள 4-ஆம் பிரதிவாதி இவ்வழக்கின் 6-ஆம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான்.

7. மேற்சொன்ன பள்ளி காமராஜர் சாலையில் எப்போது செயல்பாட்டிற்கு வந்தது என்றால் 2007, ஜுனில் செயல்பாட்டிற்கு வந்தது. 2006-ல் செயல்பாட்டிற்கு வந்தது என்றால் நினைவில்லை. மேற்சொன்ன பள்ளிக்கு 1988-1991 வரை முகமது அப்துல் ரசாக் என்பவர் பள்ளியின் Correspondent-ஆக இருந்தார் என்றால் சரியல்ல. அந்த நேரத்தில் பள்ளிக்கு Correspondent என்ற பதவி கிடையாது. 1991-1994 வரைக்கும் இவ்வழக்கின் 3-ஆம் பிரதிவாதியான நஜுமுதீன் என்பவர் பள்ளியின் Correspondent ஆக இருந்துள்ளார் என்றால் சரியல்ல, அவர் தற்போது உயிருடன் இல்லை என்று சாட்சி தன்னிச்சையான கூறுகிறார். மேற்படி நஜுமுதீன் வாரிசுகள் இவ்வழக்கின் கட்சியாக சேர்க்கப்படவில்லை என்றால்

**(P.W.1)- ஃபருக்**

**1, 2, 5 முதல் 7 ஆம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

எனக்கு அதுபற்றி தெரியாது. அவருடைய மரணமும் இவ்வழக்கில் பதிவு செய்யப்படவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 1994-1997 வரைக்கும் மேற்சொன்ன பள்ளியின் Correspondent ஆக கலீல் ரகுமான் இருந்துள்ளார் என்றால் சரியல்ல. 1997-2000 வரைக்கும் மேற்சொன்ன பள்ளியின் Correspondent ஆக முகமது இஸ்மாயில் இருந்துள்ளார் என்றால் சரிதான்.

8. 2000-2004 வரைக்கும் மேற்சொன்ன பள்ளியின் Correspondent ஆக இவ்வழக்கின் 2-ஆம் பிரதிவாதியான M.A. பசீர் இருந்துள்ளார் என்றால் சரிதான். 2004-2012 ஜனவரி 21 வரைக்கும் மேற்சொன்ன பள்ளியின் Correspondent ஆக நான் இருந்துள்ளேன் என்றால் 2012 ஜனவரி 30 வரை பதவியில் இருந்தேன். 22.01.2012 முதல் 28.01.2012 வரை மேற்சொன்ன பள்ளியின் Correspondent ஆக இவ்வழக்கின் 1-ஆம் பிரதிவாதி பீர் முகமது இருந்துள்ளார் என்றால் சரியல்ல. 29.01.2012 முதல் 18.02.2012 வரைக்கும் மேற்சொன்ன பள்ளியின் Correspondent ஆக இவ்வழக்கின் 3-ஆம் பிரதிவாதி நஜீ முதீன் இருந்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 19.02.2012 முதல் இதுநாள் வரைக்கும் மேற்சொன்ன பள்ளியின் Correspondent ஆக இவ்வழக்கின் 1-ஆம் பிரதிவாதி பீர் முகமது இருந்துவருகிறார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் 2004-2012, ஜனவரி வரைக்கும் மேற்சொன்ன பள்ளியின் Correspondent ஆக பதவி வகித்துள்ளபோது வேலூர் மாவட்டத்தில் உள்ள சி.அப்துல் அக்கீம் கலைக் கல்லூரில் ஆங்கில பேராசிரியராக

(P.W.1)- ஃபருக்

**1, 2, 5 முதல் 7 ஆம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

முழுநேரப்பணியில் இருந்தேன் என்றால் சரிதான்.

9. மேற்சொன்ன கல்லூரி அரசு உதவி பெறும் கல்லூரி என்றால் சரிதான். நான் அந்நேரத்தில் மேற்சொன்ன கல்லூரில் பணியில் இருந்தபோது மேற்சொன்ன பள்ளியின் நிதியை கையாடள் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் மேற்சொன்ன பள்ளியில் Correspondent ஆக பதவி வகிக்கும் காலத்தில்தான் பள்ளியின் நிதியை கொண்டு என் பெயரிலும் என் சகோதரர் பெயரிலும் தலா 5 சென்ட் சொத்து கிரையம் பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. மேற்சொன்ன 10 சென்ட் நிலம் பள்ளியின் நிலத்தை ஒட்டி உள்ளது என்றால் சரிதான். எங்களுடைய சொசைட்டி 50/86 வருடாந்திர கணக்கு நான் சங்கப் பதிவாளருக்கு (Society of Registrar) அனுப்பாத காரணத்தினால் 02.06.1993 அன்று சங்கம் செயலிழந்ததாக அரசிதழில் (Gazette) அறிவிக்கப்பட்டது என்றால் சரிதான்.

10. மேற்சொன்ன அறிவிப்பு வந்தபிறகும் மேற்சொன்ன பள்ளி Society-யின் கட்டுப்பாட்டில்தான் செயல்பட்டது என்றால் சரிதான். Director of School Education of Proceedings RC.No.10149EZ/97. Dated:27.01.1998 -ன்படியும் அதன்பின் உள்ள உத்தரவு படியும் இன்றுவரை Society-யின் கட்டுப்பாட்டில்தான் பள்ளி செயல்பட்டு வருகிறது என்றால் சரிதான்.

**(P.W.1)- ஃபருக்**

**<u>1, 2, 5 முதல் 7 ஆம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

(ஒப்பம்)
மாவட்ட உரிமையியல்நீதிபதி
இரணியல்,